போது தேர்
லம் சுத்தம்
ம் விளக்கு
அவற்றில்
படும். இத
ட்டத்தன்று
பாலிவுடன்

ணைய் பயன்
ரில் உள்ள
க்கு படிந்து,
வெளியே
ல என்று
லைத்துறை
கள் புகார்


றநிலையத்
யதாரர்கள்
திமதி அம்
தம் செய்ய

ணி மும்முரம்
த ஒரு மாத

காலமாக தேர் சுத்தம் செய்யும் பணி நடந்து வருகிறது. தேரில் உள்ள மர சிற்பங்களுக்கு எந்த வித பாதிப்பையும் ஏற்படுத் தாத வகையில் ரசாயன கலவை மூலம் சுத்தம் செய்யப் படுகிறது. தேர் சுத்தம் செய்யும் பணி மும்முரமாக நடந்து வரு கிறது.

இந்த பணி 90 சதவீதம் நிறை வடைந்து விட்டது. இதனால் தேர்களில் உள்ள மர சிற்பங்க ளும், கலை வேலைப்பாடு களும் புத்துயிர் பெற்று தேரும் புதுப்பொலிவு பெற்று வருகி றது.

இன்னும் ஒரு வாரத்துக்குள் சுத்தம் செய்யும் பணி நிறைவ டையும் என கோவில் நிர்வா கிகள் தெரிவித்தனர்.



..ந்த கருத்தரங்கில் ஐகோர்ட்டு முன்னாள் ..டுத்த படம்.

மீறல் பற்றி

## ..வு ஏற்படுத்த வேண்டும்

### ..ன்னாள் நீதிபதி பேச்சு

விட் கிறிஸ்
தொடங்கி
போது அவர்

மீறல்கள்
மீறல்கள்
வருகிறது.
க்கப்படுகி
செல்லும்
துன்பங்க
கள். இதை
நிறுத்த
ல், விழிப்பு
த்தவர்கள்
ச்சினையில்
லை. மனித

னார்.

கருத்தரங்கில் கல்லூரி இணை முதல்வர் தாமஸ்புனி தன், துணை முதல்வர் டேனிஸ் பொன்னையா, ஒருங்கிணைப் பாளர் ஜான் பிரிட்டோ மற் றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இன்றும் (சனிக்கிழமை) கருத்தரங்கு நடக்கிறது. பல கல்லூரிகளை சேர்ந்த பேரா சிரியர்கள் பல்வேறு தலைப்பு களில் பேசுகிறார்கள்.


வீட்டு மனைகள்
ரூ. 12,000


996 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது. பாளை யங்கோட்டையில் நேற்று ஹெல்மெட் அணியாமல் மோட் டார் சைக்கிள் ஓட்டி வந்த ஒரு சிறப்பு சப்-இன்ஸ்பெக்டரை வாகன சோதனையில் நின்ற இன்ஸ்பெக்டர் எச்சரித்து அனுப் பினார்.

தினதந்தி 10.12.2011

### நெல்லை டவுனில்

# கேரள மாநிலத்தை சேர்ந்த நகைக்கடை முன்பு முற்றுகை

## ஆதித்தமிழர் பேரவையினர் 17 பேர் கைது

நெல்லை, டிச.10-

நெல்லை டவுனில் உள்ள கேரள மாநிலத்தை சேர்ந்த நகைக்கடையை, ஆதித்தமிழர் பேரவையி னர் நேற்று திடீரென்று முற்றுகையிட்டனர். அவர்கள் 17 பேரை போலீசார் கைது செய் தனர்.

**முல்லை பெரியாறு பிரச்சினை**

முல்லை பெரியாறு அணை தொடர்பாக கேரளா மற்றும் தமிழகத்தில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதையொட்டி தமிழ்நாட்டில் இருக்கும் கேரளா மாநிலத்தை சேர்ந்தவர்களின் கடைகள் முன்பு தமிழ் அமைப்பினர் போராட்டங்கள் நடத்தி வரு கின்றனர்.

சபரி மலைக்கு சென்ற அய் யப்ப பக்தர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை கண்டித் தும், கடைகள் முன்பு மலை யாள மொழியில் எழுதப்பட்டு இருந்த பெயர் பலகையை அகற்ற கோரியும் இந்து முன் னணி சார்பில் நெல்லையில் நேற்று முன்தினம் போராட் டம் நடைபெற்றது.


**நகைக்கடை முற்றுகை**

இந்த நிலையில் ஆதித்தமி ழர் பேரவையினர் நேற்று திடீர் போராட்டத்தில் ஈடு பட்டனர். நெல்லை டவுன் மேலரதவீதியில் இருக்கும் கேரள மாநிலத்தை சேர்ந்த ஒரு நகைக்கடை முன்பு ஆதித் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் கலைக்கண்ணன், மாவட்ட தலைவர் சுந்தரராஜ் உள்ளிட்டோர் திரண்டு முற் றுகையிட்டனர்.

அவர்கள் முல்லை பெரி யாறு அணைக்கு பதிலாக புதிய அணை கட்டக்கூடாது என்பன உள்ளிட்ட கோஷங்களை எழுப்பினர்.

**17 பேர் கைது**

இதுபற்றி தகவல் அறிந்த நெல்லை டவுன் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ரேணி யஸ் ஜேசுபாதம் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். அங்கு போராட்டம் நடத்திய ஆதித் தமிழர் பேரவையினர் 17 பேரை கைது செய்தனர்.



நெல்லை டவுனில் உள்ள நகைக்கடையை ஆதித்தமிழர் பேரவை அமைப்பினர் முற்றுகை செய்து கோஷங்கள் எழுப்பிய போது எடுத்த படம்.


நர்ஸ்கள் தேவை
திருநெல்வேலி, வண்ணார்பேட்டையில் உள்ள


## 3 மகள்களு..

திருப்பூர், டிச.10-

திருப்பூரில் சாப்பாட்டில் விஷம் கலந்து தின்று 3 மகள்களுடன் தாய் தற் கொலை செய்து கொண் டார்.

இந்த பரிதாப சம்பவம் குறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது:-

**பனியன் கம்பெனி தொழிலாளி**

திருப்பூர் தாராபுரம் ரோடு பெரிச்சிப்பாளையம் அன்ன மார்காலனியைச் சேர்ந்தவர் பாப்பாத்தி (வயது 65). இவர் தனக்கு சொந்தமான வீட்டை வாடகைக்கு விட்டு உள்ளார். 3 வீடுகள் உள்ள குடியிருப்பு வளாகத்தில் ஒரு வீட்டில் பாப் பாத்தி குடியிருந்து வருகிறார். மற்றொரு வீட்டில் கடந்த $2\frac{1}{2}$ மாதங்களுக்கு முன் கவுரி (40) என்ற பெண் தனது கணவர் ரமேசுடன் (45) வாடகைக்கு குடியேறினார். கவுரி, அருகே உள்ள பனியன் கம்பெனிக்கு வேலைக்கு சென்று வந்தார்.

கவுரிக்கு யமுனா (16), செல்வி (15), ரம்யா (14) என்ற 3 மகள்கள் இருந்தனர். இவர்கள் 3 பேரும் பொள் ளாச்சியில் உள்ள விடுதியில் தங்கியிருந்து படித்து வந்தனர். கடந்த 8-ந் தேதி யமுனா, செல்வி, ரம்யா ஆகிய 3 பேரும் பொள்ளாச்சியில் இருந்து திருப்பூர் வந்தனர். கவுரியுடன் வீட்டில் தங்கினார்கள்.

**கதவு திறக்கவில்லை**

நேற்று முன்தினம் இரவு வழக்கம் போல் 9 மணிக்கு கதவை பூட்டிக் கொண்டு 4 பேரும் தூங்கினார்கள். இந்த நிலையில் நேற்று காலை வீட்டு உரிமையாளர் பாப்பாத்தி தனது உறவினர் வீட்டுக்கு சென்று விட்டார். மாலை 4 மணி அளவில் பாப்பாத்தி வீடு திரும்பினார். ஆனால் கவுரியின் வீடு திறக்கப்படா மல் இருந்தது.

பாப்பாத்தி சென்று கவுரி குடியிருக்கும் வீட்டு கதவை தட்டினார். வீட்டுக்குள் இருந்து எந்தவித பதிலும் வர வில்லை. உடனே இதுகுறித்து அக்கம் பக்கத்தினரிடம் பாப் பாத்தி கூறினார். அவர்கள் திரண்டு வந்து கதவை தட்டி


யாரும் கொடுக்க..
ய..
மனி..

தினகரன்



கேரளாவில் தமிழர்கள் தாக்கப்படுவதை கண்டித்து டவுனில் உள்ள நகைக்கடைமுன் ஆர்ப்பாட்டம் செய்த ஆதித்தமிழர் பேரவையினரை போலீசார் கைது செய்தனர்.

### கேரளாவில் தமிழர்கள் தாக்கப்படுவதை கண்டித்து

# நெல்லையில் நகை கடைகள் முன்பு மறியலுக்கு முயற்சி

**ஆதிதமிழர் பேரவையினர் 17 பேர் கைது**

நெல்லை, டிச.10: தமிழர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து நெல்லை டவுனில் உள்ள கேரளாவைச் சேர்ந்தவர்களின் நகைக்கடைகள் முன்பு மறியல் செய்ய முயன்ற ஆதித்தமிழர் பேரவையினர் 17 பேர் கைது செய்யப்பட்டனர்.

முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக கேரள எல்லையில் பதற்றம் நிலவி வருகிறது. அங்கு வாழும் தமிழர்கள், அவர்களின் கடைகள் தாக்கப்பட்டு வருகின்றன. இதைக் கண்டித்து சென்னை, கும்பகோணம், கோவை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கேரள வணிக நிறுவனங்கள் முன் நாம் தமிழர் இயக்கம் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்புகள் போராட்டம் நடத்தி வருகின்றன.

நேற்று நெல்லை டவுனில் உள்ள கேரள நகைக்கடைகள் முன் மறியல் போராட்டம் நடத்த ஆதித்தமிழர் பேரவையைச் சேர்ந்தவர்கள் ஊர்வலமாக செல்ல முயன்றனர். ஆதி தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் கலைக்கண்ணன் தலைமை வகித்தார். டவுன் உதவி போலீஸ் கமிஷனர் ஸ்டான்லி ஜோன்ஸ் தலைமையில் இன்ஸ்பெக்டர் ஜெயசேகரன், எஸ்ஐ அன்னபூரணி, போலீசார் அங்கு குவிக்கப்பட்டனர். கேரள அரசுக்கு எதிராக கோஷமிட்டபடி ஊர்வலமாக செல்ல முயன்ற மாவட்ட இளைஞரணி செயலாளர் இளஞ்செழியன், ஒன்றிய கொள்கை பரப்பு செயலாளர் மணிமாறன், மாரி முத்து, சீனிவாசன் உட்பட 17 பேரை போலீசார் கைது செய்தனர்.

# நெல்லை

நெல்லை, டிச.10: தொ
டையால் நெல்லையப்ப
இருளில் மூழ்கியது.
தரிசிக்க வரும் பக்தர்
மண்டப படிக்கட்டுக
இடறி விழும் நிலை
டுள்ளது.

பிரசித்தி பெற்ற
யப்பர் கோயிலுக்கு
மதிப்பிலான சொத்துக
மேலும் ரதவீதிகளை
250க்கும் மேற்பட்ட க
மூலம் வாடகை மற்றும்
வருமானமும் கிடைக்கி
2004ம் ஆண்டு கும்ப
திற்கு பிறகு கோயிலு
பக்தர்கள், சுற்றுலா
எண்ணிக்கை அதிகரி
இதன் காரணமாக உ
வருமானமும் உயர்ந்து

தொடர் மின்தடை க
நெல்லையப்பர் கோயில்
சன்னதி உள்ளிட்ட
இருளில் மூழ்கியுள்ளன.
ஏற்றப்படும் தீப ஒளியி
சத்தில் பக்தர்கள் தரிச
கின்றனர்.

மின்தடையின் போ
சன்னதி நந்தி முன்
லைட்டும், அர்த்த மண்

தமிழ்முரசில்
வேலை வாய்ப்பு செய்திகள்
ஞாயிறுதோறும் படியுங்கள்

## வாகனம் மோதி ஒருவர் சாவு

நெல்லை, டிச. 10: நெல்லை அருகே உள்ள தாழையூத்து சித்தி விநாயகர் கோயில் தெருவை சேர்ந்தவர் முருகன் (53). நேற்று இவர் நெல்லை வந்து ஹெல்மெட் வாங்கிவிட்டு மொபட்டில் தாழையூத்து சென்று கொண்டிருந்தார். ஹெல்மெட்டை தலையில் அணிந்

### ஓட்டல் சரவணபவன் சார்பில்

# புன்னைநகர் கோயிலில் வணிக வளாகம்–பக்தர்கள் தங்கும் அறை

**டிச.14ம் தேதி திறப்பு**

திருச்செந்தூர், டிச. 10: புன்னைநகர் கோயில் பகுதியில் ஓட்டல் சரவணபவன் சார்பில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகம் மற்றும் பக்தர்கள் தங்கும் அறை வரும் 14ம் தேதி திறக்கப்படு



நாடு மற்றும் புதுச்சேரியில் வக்கீல்கள் ஒருநாள் கோர்ட் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இந்த போராட்டத்தில் நெல்லை வக்கீல்களும் கலந்துகொள்கின்றனர்.

இத்தகவலை தமிழ்நாடு, புதுச்சேரி கீழமை கோர்ட் சங்கத்தின் துணைதலைவர் முத்துராமலிங்கம் தெரிவித்தார்.

**பொதுக்குழு கூட்டம்:** நெல்லை வக்கீல்களின் பொதுக்குழு கூட்டம் இன்று(10ம் தேதி) வக்கீல் சங்க கட்டடத்தில் நடக்கிறது. இக்கூட்டத்தில் கோர்ட்டுகளில் காலியாக உள்ள மாவட்ட நீதிபதிகளின் பணியிடங்களை நிரப்பபடாமல் இருப்பதை கண்டித்து சில முக்கிய முடிவுகள் எடுக்கப்படுகிறது.

தினமலர்

# நெல்லை டவுனில் நகைக்கடை முற்றுகை ஆதித்தமிழர் பேரவையினர் 17 பேர் கைது

திருநெல்வேலி,டிச.10— 10.12.2011

முல்லை பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக, நெல்லை டவுனில் நகைக்கடையை அடைக்ககோரி ஆதித்தமிழர் பேரவையினர் திடீர் முற்றுகை போராட்டம் நடத்தினர். 17 பேர் கைது செய்யப்பட்டனர்.

முல்லை பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக தமிழகத்தில் இருந்து கேரளாவிற்கு செல்லும் வாகனங்கள், ஐயப்ப பக்தர்கள் தாக்கப்பட்டு வருகின்றனர். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் கேரள மாநிலத்தவர் நடத்தும் வணிக நிறுவனங்களை அடைக்ககோரி தமிழ் அமைப்புகள் ஆர்ப்பாட்டம் மற்றும் மறியல் போன்ற போராட்டங்களை நடத்திவருகின்றனர்.

இந்நிலையில் நேற்று நெல்லை டவுன் மேலரதவீதியில் கேரள மாநிலத்தவர்களால் நடத்தப்படும் நகைக்கடையை ஆதித்தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் கலைக்கண்ணன் தலைமையில் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். உடனடியாக நகைக்கடையும் அடைக்கப்பட்டு, பலத்த போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இதையடுத்து அனுமதியின்றி ஆர்ப்பாட்டம் நடத்திய ஆதித்தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் கலைக்கண்ணன், மாவட்ட தலைவர் சுந்தர்ராஜ், மாவட்ட இணை செயலாளர் இளஞ்செழியன் மற்றும் சீனிவாசன், மாரிமுத்து, மணிமாறன்,தமிழ்முத்து, பொன் வளவன், பிரபாகரன் உட்பட 17 பேர் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் அப்பகுதியில் திடீர் பரபரப்பை ஏற்படுத்தியது.

# 'விளையாட்டு வினையானது' மின் டவரில் ஏறிய மாணவர் தவிப்பு

**★ நான்குநேரி அருகே பரபரப்பு**

திருநெல்வேலி, டிச.10—

குஜராத் மாநிலத்தில் பசுவதை தடை
டம் அமலில் உள்ளது. இதனால் அந்த
லம் செழிப்புடன் விளங்கி வருகிறது.
களை தொழுவத்தில் கட்டி போட்டு வள
கூடாது. அதனை சுதந்திரமாக உலா
செய்ய வேண்டும் என்பதற்காக தான்
நடை என்று அழைக்கிறோம். வீட்டில்
களை வளர்ப்பவர்கள் நாம் தினமும் சாப்பி
கூடிய உணவு வகைகளை பசுக்களுக்கு வ
கினால் குடும்பத்தில் பிரச்னை நீங்கி, சந்
ஷம் அதிகரிக்கும். தலைமுறையை வா
யடி வாழையாக காக்கும். நாடும், வீ
வளம்பெற பசு பாதுகாப்பு அவசியமாகும்


பசு மாடுகள் இறைச்சிக்காக அண்
மாநிலங்களுக்கு அடிமாடுகளாக செல்வ

# வள்ளியூர்
# குருபூஜை, கு

வள்ளியூர், டிச.10—

வள்ளியூர் ஸ்ரீபுரம் சாமியார்பொத்தை முத்துகிருஷ்ணசுவாமி குருபூஜை மற்றும் குருஜெயந்தி விழா 9 நாட்கள் கோலாகலமாக நடந்தது.

வள்ளியூர் சாமியார்பொத்தையில் முத்துகிருஷ்ண சுவாமி குருபூஜை மற்றும் குருஜெயந்தி விழா ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் நடைபெறும். அதன்படி இந்தாண்டு கடந்த 9ம் தேதி சூட்டுபொத்தை மலையடிவாரத்தில் உள்ள வன விநாயகர் கோயிலில் சிறப்பு பூஜையுடன் தொடங்கியது. 9 நாட்கள் நடந்த திருவிழாவில் தினமும் காலையில் வன விநாயகருக்கு சிறப்பு பூஜை நடந்தது. காலை 10 மணிக்கு முத்துகிருஷ்ண சுவாமிக்கு பல்வேறு அபிஷேக ஆராதனை, பூஜைகள், பஜனை, கலை நிகழ்ச்சிகள் முத்துகிருஷ்ணா சித்திரக்கூடத்தில்



வள்ளியூர்
வேடமணி

நடந்தது.

ஐந்தாம்
சூட்டுபொ
சுற்றி கிரி
தில் முத்து
தேரில் பவ

ஜெமவர்(

ாகுளம் அணுமின் நிலையத்தை

ஆனால், பாஸ்போர்ட் சேவை மையத்தை ஆன்லைன் மூலமாக தொடர்புகொண்டு பதிவு

பாஸ்போர்ட் சேவை மையத்துக்கு வரும் விண்ணப்பதாரர்கள் சிறுநீர் கழிக்கக்கூட ஒரு

னைகளுக்கு முடிவு காண வே விண்ணப்பதாரர்களின் எதிர்பா

தினமணி 10-12-2011

# நகைக் கடையை முற்றுகையிட முயற்சி: ஆதித் தமிழர் பேரவையினர் 17 பேர் கைது



திருநெல்வேலி மேல ரத வீதியில் நகைக் கடையை முற்றுகையிட முயன்ற ஆதித்தமிழர் பேரவையினரை தடுத்து நிறுத்தும் போலீஸார்.

திருநெல்வேலி, டிச. 9: திருநெல்வேலி நகரத்தில் நகைக் கடையை முற்றுகையிட முயன்ற ஆதித் தமிழர் பேரவை அமைப்பைச் சேர்ந்த 17 பேரை போலீஸார் வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

முல்லைப் பெரியாறு அணைக்குப் பதிலாக புதிய அணை கட்ட முயற்சி மேற்கொண்டு வரும் கேரள அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழகத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்பினர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கோவை, தஞ்சாவூர், கும்பகோணம் உள்ளிட்ட பகுதியில் கேரளத்தைச் சேர்ந்தவர்கள் நடத்தி வரும் நகைக் கடைகளை சிலர் சேதப்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், மாநிலம் முழுவதும் கேரளத்தைச் சேர்ந்தவர்கள் நடத்தும் வர்த்தக நிறுவனங்களுக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. திருநெல்வேலி நகரத்தில் உள்ள இரண்டு நகைக் கடைகள் முன் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே, ஆதித் தமிழர் பேரவை அமைப்பைச் சேர்ந்த சிலர் நகரத்தில் உள்ள நகைக் கடை முன் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட வெள்ளிக்கிழமை திரண்டனர்.

தகவலறிந்ததும் நகரம் போலீஸார் 50-க்கும் மேற்பட்டோர் அங்கு குவிக்கப்பட்டனர்.

போலீஸார் தடை விதித்திருந்த போதிலும் தடையை மீறி நகைக் கடையை முற்றுகையிட முயன்றதாக ஆதித் தமிழர் பேரவையின் மாவட்டத் தலைவர் கலை கண்ணன், செயலர் சுந்தரராஜன் உள்பட 17 பேரை போலீஸார் கைது செய்தனர்.

## 'மாநகராட்சி

திருநெல்வேலி, டிச.9: மாநகராட்சி யிடங்களை நிரப்ப ஆணையர் வடிக்கை எடுக்க வேண்டும் என் மாநகராட்சி அனைத்து அலுவ கூட்டமைப்பு பொதுக்குழுக் க னம் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கூட்டமைப்பின் பொது மற்றும் நிர்வாகிகள் தேர்தல் கிழமை திருநெல்வேலி சந்திப்பி அரசு அலுவலர் ஒன்றியக் க பெற்றது.

கூட்டமைப்பின் தலைவர் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மாநகராட்சியில் கருணை அடி

## கூடங்குளம் போரா

திருநெல்வேலி, டிச.9: முல்லைப் அணை விவகாரத்தைக் கிளப்பி, அணு உலை போராட்டத்தை மத்திய அரசு முயற்சி செய்கிறது திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட்- மக்கள் விடுதலை கட்சி தமிழக மீ.த. பாண்டியன் தெரிவித்தார்.

இதுகுறித்து திருநெல்வேலியில் கிழமை செய்தியாளர்களுக்குப் ளித்த அவர் மேலும் கூறியதாவது

கூடங்குளம் அணு உலை போராட்டத்துக்கு ஆதரவாக சென்னையில் உண்ணாவிரதம் றது. அணு உலை போராட்டம் தீ வருவதை அறிந்த மத்திய அரசு அதை திசை திருப்பும் முயற்சியில்


மனைகள் வி

திருநெல்வேலி புதியபேருந்து 3வது கி.மீ. தொலைவில் துர்காம்பிகை பெட்ரோல் அபிமீனா நகரில் 4.25 முதல் 3 மனைகள் விற்பனை

Email: greenlandpromoters@yahoo.in

GREENLAND PROMOTERS

No.1, Raja Complex, STC College Road, P


## வேன் ஓட்டுநர் விஷம் குடித்து தற்கொலை


மனித உரிமைகள்

தமிழ்முரசு 9-12-2011




தமிழர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து டவுனில் உள்ள கேரளாவைச் சேர்ந்த நகைக்கடைகள் முன்பு மறியல் செய்ய முயன்ற ஆதித்தமிழர் பேரவையினரை போலீசார் மடக்கிப்பிடித்து கைது செய்தனர்.

### தமிழர்கள் தாக்கப்படுவதை கண்டித்து

# டவுனில் நகைக்கடைகள் முன்பு மறியல் செய்ய முயற்சி

## ஆதித்தமிழர் பேரவையினர் 17 பேர் கைது

நெல்லை, டிச. 9-
தமிழர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து டவுனில் உள்ள கேரளாவைச் சேர்ந்த நகைக்கடைகள் முன்பு மறியல் செய்ய முயன்ற ஆதித்தமிழர் பேரவையினர் 17 பேர் கைது செய்யப்பட்டனர்.

முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக கேரள எல்லையில் பதற்றம் நிலவி வருகிறது. அங்கு வாழும் தமிழர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இதைக் கண்டித்து சென்னை, கும்பகோணம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கேரள வணிக நிறுவனங்கள் முன்பு நாம் தமிழர் இயக்கம் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்புகள் போராட்டம் நடத்தின.

இந்நிலையில் இன்று நெல்லை டவுனில் உள்ள கேரள நகைக்கடைகள் முன்பு மறியல் போராட்டம் நடத்த ஆதித்தமிழர் பேரவையைச் சேர்ந்தவர்கள் ஊர்வலமாக செல்ல கூடினர். மாவட்ட செயலாளர் கலைக்கண்ணன் தலைமை வகித்தார்.

தகவலறிந்ததும் டவுன் உதவி போலீஸ் கமிஷனர் ஸ்டேன்லிஜோஸ் தலைமையில் இன்ஸ்பெக்டர் ஜெயசேகரன், சப்-இன்ஸ்பெக்டர் அன்னபூரணி மற்றும் போலீசார் அங்கு குவிக்கப்பட்டனர். கேரள அரசுக்கு எதிராக கோஷமிட்டபடி ஊர்வலமாக செல்ல முயன்ற மாவட்ட இளைஞரணி செயலாளர் இளஞ்செழியன், ஒன்றிய கொள்கை பரப்பு செயலாளர் மணிமாறன், மாரிமுத்து, சீனிவாசன் உட்பட 17 பேரை போலீசார் கைது செய்தனர்.

### பாளை. - குலவணிகர்புரம் சாலையில்

# 21ம் தேதி முதல் போக்குவரத்து நிறுத்தம்

நெல்லை, டிச. 9-

## சீவலப்பேரி ஆற்றில் மணல் கடத்திய 3 பேர் கைது

### லாரிகள் பறிமுதல்

நெல்லை, டிச.9-

